# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பிரதேச சபைகள் (திருத்தம்)

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால்*
*2018, ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *241 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 12.00 தபாற் செலவு : ரூபா 10.00

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பிரதேச சபைகள், தோட்டக் குடியிருப்புகளில் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பிரதேச சபை நிதியத்தின் ஏதேனும் பாகத்தைச் செலவளிப்பதை இயலச்செய்வதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பிரதேச சபைகள், விசேட தீர்மானமொன்றை ஏற்றுக்கொண்டதன்மேலும் இயைபான தோட்டத்தின் நிருவாக அதிகாரிகளுடனான ஒருப்பாட்டிலும், பெருந்தோட்டப் பிராந்தியங்களில் வீதிகளையும் வேறு பொது வாழ்வசதிகளையும் நிர்மாணித்துப் பேணுவதற்கு இயலச்செய்வதாகும்.

ச.வ-ஓ 3/2016

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிரதேச சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (XIV) என்னும் பந்தியில், "கிராம வேலைகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கிராம வேலைகளை அல்லது தோட்டக் குடியிருப்புகளை நிருமாணிப்பதிலும் மாற்றுவதிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (XXII) என்னும் பந்தியில், "தேர்ந் தெடுத்த கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி யிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்ந் தெடுத்த கிராமங்கள், தோட்டக் குடியிருப்புகள் என்ப வற்றின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவுக்கு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) உட்பிரிவு (1) ஐ மீள இலக்கமிட்டதன் உடனடுத்துப் பின்னர், பின்வரும் பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(2) பெருந்தோட்டப் பிராந்தியங்களின் விடயத்தில், பிரதேச சபைகள் விசேட தீர்மானமொன்றை சேர்த்துக் கொண்டதன் மேல் அத்துடன் இயைபான தோட்டத்தின் நிருவாக அதிகாரிகளுடனான ஒருப்பாட்டுடனும், அந்தந்த பெருந்தோட்ட பிராந்தியங்களில் வதிவோரின் சேமநலனுக்கென அவசியமான வீதிகள், கிணறுகள் மற்றும் வேறு பொது வாழ்வசதிகளை வசதியளிப்பதற்கு பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தலாம்.

இப்பிரிவின் நோக்கத்திற்காக, “பெருந்தோட்டப் பிராந்தியங்கள்” என்பது, தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் எண்ணெய்கொள் மரம் ஆகியன பயிர்செய்யப்படும் தோட்டங்களில் வதிவுள்ள தொழிலாளர்கள் வாழும் மத்திய, ஊவா, சப்பிரகமுவ, தெற்கு, மேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ்வரும் இடப்பரப்புகள் எனப் பொருள்படும்.”.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.